DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 666/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.1 P.W.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | விஜயகுமார் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | |
| கிராமம் | : | | இனம் | |
| தாலூக்கா | : | | வயது | |
| Mail ID | : | | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 04.03.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் பழனி நகராட்சியில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.07.2018 ம் தேதியன்றுஉடுமலை நகரட்சியில் பணியில் இருநத போது S அம்ஜத் இப்ராம்கான் என்பவர் உடுமலைப்பேட்டை நகராட்சியில் அமைந்துள்ள New அக்சயா பேக்கரியில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த டி டஸ்ட் லூஸ் கண்டிசன் என்ற உணவு பொருளின் தரத்தை ஆய்வு செய்த ஆய்விற்கு உட்படுத்தி அறிக்கை பெற்று வழக்கு தொடர அனும திவேண்டி கடிதம் பெற்ற நிலையில் அவர் பணி மாறுதல ஆகி விட்டதால் 01.07.2019 ம் தேதி பொறுப்பிற்கு வந்த என்னிடம் கோப்பினை என்னிடம் கொடுத்தார். உணவு பாதுகாப்பு அலுவலர் என்பதற்கான அரசிதழ் அசா.ஆ.15 என குறியீடு செய்யப்படுகிறது. உணவு பாதுகாப்பு ஆணையாளர் 26.09.2019 அனுமதி வழங்கினார். ஆணையாளர் உத்தரவு நகல் அசா.ஆ.16 என குறியீடு செய்யப்படுகிறது. ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரி ராமநாதன் என்பவர் மீது கனம் நீதிமன்றத்தில் உணவு பாதுகாப்பு சட்டப்படி வழக்கு தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பொதுவாக உணவு மாதிரிக்காக அனுப்பப்ட்ட நிலையில் எத்தனை நாட்களுக்குள் அறிக்கை வர வேண்டும என்றால் 14 அ நாட்களுக்குள். இந்த வழககில் எத்தனை நாட்கள் கழித்து அறிக்கை வந்தது என்றால் 11 மாதம் கழித்து வந்தது. டீ தூளின் அதிகபட்ச ஆயுட்காலம் எவ்வளவு என்றால் 12 மாதம். வழக்கு கோப்பில் டீ தூள் எதிரியால் எந்த காலத்தில் எங்கு வாங்கப்பட்டது என்று விசாரித்து விசாரணை அதிகாரி பதிவு செய்யவில்லை என்றால சரிதான். எந்த பொருளாக இருந்தாலும் ஒரே கவரில் 6 மாதம் வரை கட்டி வைத்திருந்தால் அதன் தரம் மாறும் என்றால் அவ்வாறு இல்லை. டீ த்தூள் வாங்கப்பட்டு 10 மாதத்திற்கு பின் ஆய்விற்கு அனுப்பியும் அங்கு அவர்கள் ஒரு 10 மாதம் வைத்திருந்தால் மொத்தம் 20 மாதம் வைத்திருந்து ஆய்வு செய்யும் போது அதன்தரம் மாற வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான், அதில் கலந்திருக்கும் கெமிக்கலின் தன்மை எத்தனை வருடமாக இருந்தாலும் மாறாது. பொதுவாக எந்த பொருளாக இருந்தாலும் ஒரு காலத்திறகு பின் அழியும் என்றால் சரிதான். நீங்கள் உங்கள் உயர் அதிகாரி சரிவர விசாரிக்காமல் வைத்திருந்த வழக்கு கோப்பினை வைத்து சரிவர நீங்கள் விசாரிக்காமல் பொய்யாக சாட்சியம்அளிக்கிறிர்கள் என்றாலும் இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.